உ

சிவமயம்

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் துணை



இணுவில்

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்

# திருஅந்தாதிக் கீர்த்தனைகள்

இயற்றியவர்:

இயலிசைவாரிதி, கவிமாமணி, அருட்கலைவாரிதி,

ஸாஹித்ய சிரோன்மணி

யாழ்ப்பாணம் - இணுவில்

**பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர்.**

இணுவில்

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்

# திருஅந்தாதிக் கீர்த்தனைகள்

இயற்றியவர்:

இயலிசைவாரிதி, கவிமாமணி,

அருட் கலைவாரிதி,

ஸாஹித்ய சிரோன்மணி

யாழ்ப்பாணம் - இணுவில்

**பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணிஐயர்**

வெளியீட்டு அனுசரணை

காலஞ்சென்ற

**திரு.பொன்னுத்துரை சிவானந்தராசா**

**(கனடா)**

அவர்கள் நினைவாக

**திரு.க. காலிங்கராசா குடும்பத்தினர்**

இணுவில் தெற்கு

இணுவில்

உ

சிவமயம்

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் துணை



# இணுவில்
# ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்
# திருஅந்தாதிக் கீர்த்தனைகள்

இயற்றியவர்:

இயலிசைவாரிதி, கவிமாமணி, அருட்கலைவாரிதி,

ஸாஹித்ய சிரோன்மணி

யாழ்ப்பாணம் - இணுவில்

## பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணிஐயர்.

இஃது

மேற்படி தேவஸ்தான வெளியீடாக

கும்பாபிஷேகத்தன்று

வெளியிடப்பெற்றது.

1997

உ
சிவமயம்
இணுவில்

# ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம்
## Inuvil Shree Pararajasekara Pillaiyar Devasthanam

Inuvil -Manipay Road
Inuvil South
Inuvil

இணுவில் - மானிப்பாய் வீதி
இணுவில் தெற்கு
இணுவில்.

## ஆசியுரை

வரலாற்று பெருமை மிக்க ஆலயமாகிய இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கோயிலின் மஹா கும்பாபிஷேகத்தின் போது ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் மீது பாடப்பெற்ற "ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருவந்தாதி கீர்த்தனைகள்" என்ற இந்நூல் வெளியிடப்படுகின்றது. இந்நூலை ஆக்கிய இயலிசை வாரிதி, பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள் மற்றொருவரும் செய்யத்துணியாத செயலாக இந்நூலின் ஆக்கம் அமைகின்றது. ஏனெனில் இவை அந்தாதிக் கீர்த்தனைகள், ஒரு கீர்த்தனையின் முடிவு மற்றைய கீர்த்தனையின் ஆரம்பமாக இருக்கின்றது. அதுவும் வெவ்வேறு இராகங்களில் கவிதா இலட்சணமான எதுகை மோனையோடு, ஆழ்ந்த பக்தி ரசனையோடு அமையப்பெற்றுள்ளது. இது போன்ற சிறந்த ஆக்கங்கள் செய்யக்கூடியவர் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் ஒருவர் தான். இளம் வயதிலேயே சிறந்த நாட்டிய நூல்களையும் கீர்த்தனைகளையும் ஆக்கியவர். இன்று அவர் தனது முதிர்ச்சியின் அனுபவத்தால் ஆக்கிய இந்நூல் எமக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்து உள்ளது. இன்று பல உயரிய நூல்களை ஆக்கிய இவர், வளமாக வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

இவ்வண்ணம்

சிவஸ்ரீ வை.சோமஸ்கந்த குருக்கள்

உ

"வேதாகமஞானபாஸ்கரன்"

சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் அவர்கள்
(அதிபர், தர்மசாஸ்தா குருகுலம் காயத்ரீ பீடம்) வழங்கிய

# ஆசியுரை

இணுவையூர் திருவருள்மிகு பரராஜ சேகர வினாயகர் மேல் ஏகவிம்சதி அந்தாதி கீர்த்தனைகள் இயற்றிப்பாடி அவர் தம் கமலத்திருவடிகளில் சமர்ப்பிக்கின்றார் இயலிசைவாரிதி பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் அவர்கள்.

திருவருள் ஊற்றெடுக்கும் ஆலயம் இணுவில் ஸ்ரீ பரராஜசேகர விநாயகர் ஆலயம். எதுகை மோனையோடு கீர்த்தனைகள் ஊற்றெடுக்கும் கற்பனைவளம் மிக்கவர் வீரமணிஐயர். ஆகவே, கேட்கவும் வேண்டுமா? ஒவ்வொரு கீர்த்தனைகளினதும் தலையங்கமே ஆச்சரியப்படத்தக்க வகையில் ஊற்றெடுத்திருக்கிறது. அந்தாதி கீர்த்தனைகள் முழுவதிலுமே பரராஜசேகரவினாயகர் அவருடைய கற்பனையில் நின்று ஊற்றெடுக்க வைத்திருக்கிறார்.

அமிர்தவர்ஷினியில் ஆரம்பித்த முதலாவது கீர்த்தனை ஊற்று. ஹம்ஸத்வனி நடையுடன் பலரஞ்சகமான ராகங்களில் பெருக்கெடுத்தோடி கல்யாண வசந்த மணங்கமழ இருபத்தோராவது கீர்த்தனையில் எல்லாப் பெருமையையும் சுருட்டி உயர்ந்து நிற்கிறது.

கும்பாபிஷேக நன்னாளில் பரராஜசேகர வினாயகரை கீர்த்தனா புஷ்பங்களை வர்ஷித்து திருவருள் பெறும் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள் நெடுங்காலம் இக்கைங்கர்யம் செய்து வர வினாயகர் திருவருள் பெருக வாழ்த்துகிறேன்.

உ

இணுவில்

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்

# திருஅந்தாதிக் கீர்த்தனைகள்

## 1

### ஓங்காரப்ரணவ விநாயகன்

ராகம் : அமிர்தவர்ஷணி                                   தாளம் : ஆதி

பல்லவி

ஓங்காரப்ரணவ விநாயகனே – சரணம்
பாங்காம் இணுவைப்பர ராஜசேகரா அருள்

அநு பல்லவி

பூங்காவ னப்பதியாம் புனித இணுவையிலே
வான்கோபுரக் கோயில் வளர்ந்தமர் ஐங்கரனே

சரணம்

சரணமடைந்தவரின் சஞ்சலம் தீர்த்துவைப்பாய்
வரமருளி எங்கள் வாழ்வைச் சிறக்கச்செய்வாய்
கரமதில் பசாங்குசக் கவ்வுயை ஏந்திடுவாய்
அரவணைத்தே எம்மை ஆதரித்தருளுவாய்.

2

## மங்களரூபன்

ராகம் : ஹம்ஸத்வனி                                        தாளம் : ஆதி

பல்லவி

அருளுவான் ஆனை முகத்தையன் – என்றும்
திருதிகழ் இணுவையில்
தும்பிக்கையன் மெய்யன்

அநு பல்லவி

பரராஜசேகரப் பிள்ளையார் பாதமே
இரவொடு பகலும் என்றும் துதி மனமே

சரணம்

மங்கள வாழ்வு மாதங்கன் தருவான்
எங்களுக்கெல்லாம் இன்பமே அருள்வான்
பொங்கும் சதுர்த்தியிலே பூரணன் வருவான்
மங்கள ரூபன் மகிழ்ந்தே எமக்கெலாம்.

3

## எல்லாம் வல்லவன் ஏரம்பன்

ராகம் : காபி

தாளம் : ஆதி

### பல்லவி

எல்லாம் வல்லவன் ஏரம்பன் – அவன்
நல்ல பரராஜ சேகர விநாயகன்

### அநு பல்லவி

நல்லாசிகள் தருவான் நலிவெலாம் தீர்த்திடுவான்
பொல்லாவினைகளெல்லாம் போக்கி எமைக்காப்பான்

### சரணம்

வல்லபை கணபதி வளமெலாம் தருவான்
வாழ்வில் இடர்கள் தீர்த்தே வாரணன் அருள்வான்
மெல்லிய பூம்பாதம் மேதினியில் துதிப்பாய்
மேவும் இணுவையிலே கோவில்கொண்ட கணபதி

# 4

## கணபதி துணை

ராகம் : காமாஸ் தாளம் : ஆதி

பல்லவி

கணபதி துணை அருள்வான் - என்றும்
இணைமலரடியருள்
இகத்தினில் தந்தருள்வான்

அநு பல்லவி

மணமலரின் சோலை மருவும் இணுவையிலே
குணபதிகோபுரக் கோயில் கொண்ட பரராஜன்

சரணம்

பரராஜசேகரக் கணேசன் - என்றும்
பரிந்தருள் தரும் ஆத்மநேயன்
ஸ்வரராக கீதநாத வேதன் - வாரணன்
சுபமங்களம் அருளும் பூரணன் ஸ்ரீ.

# 5

## நல்லதெல்லாம் தருவான்

ராகம் : ஆபேரி — தாளம் : ஆதி

பல்லவி

பூரணத்தைக் கையிலேந்தி
புனித அபயங்காட்டி
வாரணன் பரராஜ
சேகரன் அருள் பொழிவான்

அநு பல்லவி

நாரணனின் நல் மருகன்
நல்லதெல்லாம் தருவன்
ஆரத்தமிழ் மாலை சூட்டி
ஆனைமுகனைப் பணிவோம்

சரணம்

கொம்பொடித்துப் பாரதத்தைக்
கிரிதனில் வரைந்தவன்
கிம்புரியணிந்த ஐயன்
கொஞ்சியே கூத்தாடியவன்
அம்புவியில் கஜமுகனை
அழித்த ஜெய கணேசன்
எம்பவமறுக்கும் அண்ணல்
ஏரம்பன் சிவகணேசன்

6

## இணையில்லா அருட்கோலம்

ராகம் : த்வஜாவந்தி                    தாளம் : ஆதி

பல்லவி

கணேசன் புகழ் பாடுவாய் – மனமே
இணுவைப் பரராஜ சேகரக் கணபதி

அநு பல்லவி

இணையில்லா அருட்கோலம்
இனித்திடக் கொண்டவன்
மணமலர் ஆத்தி சூடும்
மாதங்கன் மதங்கமுகன்

சரணம்

பஞ்சமுகத்தானைப் பணிந்திடுவாய் மனமே
குஞ்சரக் கணபதி குதூகலம் தருபவன்
தஞ்சமென்றே கணேசன் தாளைப்பிடித்திடுவாய்
அஞ்சலெனஅருளி அனைத்தும் தருவான் செம்மல்.

7

## எம்முகம் பார்த்தருள்வான் ஏரம்பன்

ராகம் : கரஹரப்ரிய — தாளம் : ஆதி

பல்லவி

செம்முகம் ஐந்துளான் சேவடி பணிவாய்
எம்முகம் பார்த்தருள்வான்
ஏரம்பன் விநாயகன்

அநு பல்லவி

நம்பவப் பிணி களைவான்
நாயகன் கணபதி
நம்பித்தொழுதிடுவாய்
தும்பிமுகன் அருள்வான்

சரணம்

நல்இணுவை நகரினிலே
நாதனும் கோயில் கொண்டான்
பல்லியம் இயம்பிடவே
பரராஜ் விநாயகனும்
வல்லபவனி வருவான்
வரங்களும் தந்திடுவான்
வல்லபை மணாளன்சிவ
வாரணனைப் பணிவாய்நெஞ்சே.

# 8

## கொஞ்சுதமிழ் இணுவையில் கோயில் கொண்டவன்

ராகம் : ரஞ்ஜனி　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

நெஞ்சினில் குஞ்சரனை இருத்து – மனமே
அஞ்சு கரத்தானை அனுதினம் நீதுதித்து

அநு பல்லவி

கொஞ்சுதமிழ் இணுவையில்
கோயில்கொண்ட விநாயகன்
அஞ்சலென அருள்வான்
அவனை நீ அவனியில்

சரணம்

பக்தியாய்ப் பஞ்சமுகன்
பாதம் பணிந்திடுவாய்
நித்தியம்பூ வெடுத்தவன்
நீழலில் சூட்டிடுவாய்
சத்தியம் காத்திடுவாய்
சந்ததம் ஏத்திடுவாய்
அத்திமுகத்தவன்
அருளைப் புரிந்திடுவான்

9

## புரியான இணுவையின் அரிமாயன் மருமகன்

ராகம் : மதுவந்தி                                        தாளம் : ஆதி

பல்லவி

புரியான இணுவையின்
        அரிமாயன் மருமகன்
பரராஜ சேகரப்
        பிள்ளையார் அருள்சொரிவான்

அநு பல்லவி

விரிமாமலர்ப் பதமே
        கதியென்றடியர் தொழக்
கரியானைக் கணபதி
        கருணைபொழிகிறான்

சரணம்

கோபுர மணிஒலிக்கும்
        கலசம் விண்ணை அளாவும்
நூபுரச் சதங்கைஒலி
        நுண்கலைகள் வாழ வைக்கும்
தேவுக்கள் தொழுதேத்தும்
        தெய்வக் கணபதியும்
ஆவலாய் பக்தருக்கே
        அருளை அள்ளித்தருவான்

## 10

# அள்ளி அருள்தரும் ஆனைமுகன்

ராகம் : பெலஹரி
தாளம் : ஆதி

பல்லவி

அள்ளிஅருள்தரும் ஆனைமுகன் – இணுவை
தெள்ளுதமிழ்ப் பர ராஜவிநாயகன்

அநு பல்லவி

உள்ளமெனும் அரங்கில்
உவந்து நடனம் செய்வான்
வள்ளல் அருள் நிறைந்த
வாரணன் பூரணன்

சரணம்

கதிநீயே பரராஜக்
கணபதி என்றடைந்தால்
மதிசூடும் அரன்மைந்தன்
மாதங்கன் வந்தருள்வான்
பதியான இணுவையூர்ப்
பரராஜ சேகரன்
அதிஆனந்தம் தந்தே
ஆட்கொள்வான் ஐங்கரன்

# 11

## மங்களம் அருள்வான்

ராகம் : பாகேஸ்ரீ　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

ஐங்கரனின் செங்கமலப்
　　பதம் துணையே – இனுவை
பொங்குபதிப் பரராஜ
　　சேகரப் பஞ்சமுகன்

அநு பல்லவி

மங்களம் அருளுவான்
　　மாதங்கன் விநாயகன்
எங்கும் இன்பமே சூழ
　　எழிலருள் தான் பொழிவான்

சரணம்

வானுயர் கோபுரம்
　　வாழ்வின் உறுதி தரும்
தேனும் தெவிட்டும் ஞானத்
　　திருவருள் புரிகுவன்
மானும் மழுவு மேந்தும்
　　மஹாதேவனின் மைந்தன்
ஊனும் உயிருருக
　　உளமாரத்துதித்திடுவாய்

12

## கருணைக்கு ஒரு தெய்வம் கணபதி

ராகம் : ஹம்ஸாநந்தி தாளம் : ஆதி

பல்லவி

துதித்திடுவார்க் கென்றும்
 தும்பிமுகன் துணைபுரிவான்
பதி இணுவை வளர்
 பரராஜ சேகரன்

அநு பல்லவி

விதித்தவினையகற்றி
 வேழமுகன் காத்திடுவான்
உதித்த கோடிப் பானு
 ஒளிமிகும் முகமுடையான்

சரணம்

கருணைக்கு ஒரு தெய்வம்
 கணபதியே என்றும்
திருவருள் தந்து வாழ்வில்
 தீனரைக் காத்திடுவான்
பெருமான் பரராஜ
 சேகரன் பதம் பணிவாய்
திருவடியருள் தருவான்
 துதிக்கையன் பதம் நாடு.

13 ✓

## சித்தியெல்லாம் தருவான்

ராகம் : ஸிந்துபைரவி தாளம் : ஆதி

பல்லவி

நாடும் அடியவரின்
நலிவெலாம் தீர்த்திடுவான்
ஏடும் ஏர் துலங்கிடும்
எழில் இணுவைக் கணேசன்

அநு பல்லவி

பாடும் அடியவரைப்
பாலிக்க வந்திடுவான்
ஆடும் நடனக்கணேசன்
ஆறுதல் அருளுவான்

சரணம்

பக்தியோடு துதித்தால்
பரராஜ சேகரனும்
சித்தியெல்லாம் தருவான்
சிறந்த அருள் கொடுப்பான்
அத்தி முகத்தவன்
அபயமும் தந்திடுவான்
நித்தியம் அவன் கமல
நீழல் பணிந்திடுவாய்

## 14

## மணியொலித்திடும் கோவில் மஞ்சளாவிடும்கோபுரம்

ராகம் : ஷண்முகப்ரிய தாளம் : ஆதி

பல்லவி

பணிந்திடுவார்க்கருள்
பாலித்திடுவான் – எங்கள்
அணிநகர் இணுவையின்
ஆனைமுகத்தவன்

அநு பல்லவி

மணியொலித்திடும் கோயில்
மஞ்சளாவிடும் கோபுரம்
இறையவன் எங்கள் பர
ராஜசேகரன் என்றும்

சரணம்

மங்கள வாழ்வருள்வான்
மாதங்கன் பஞ்சமுகன்
ஐங்கரன் கணபதி
சங்கரனின் மைந்தன்
திங்களணி சடையான்
தினகரக் கோடிரூபன்
எங்கள் பரராஜ
சேகரவி நாயகன்.

15

## அநாதரக்ஷகன்

ராகம் : தோடி தாளம் : ஆதி

பல்லவி

விநாயகனை என்றும்
உள்ளம் போற்றும் - அவன்
அநாதரக்ஷகனன்றோ!
அருள் தரும் கணபதி

அநு பல்லவி

கனவிலும் நனவிலும்
கணபதியின் நினைவே
மனோலயத்துடன் பக்தி
மனமாரப் பெருகவே

சரணம்

பரராஜ சேகரக் கணபதி காத்தருள்வான்
சுரமேவு பதம்பாடிச் சுந்தரக்கழல் பணிவோம்
புரமான இணுவையில் புனிதக் கோயில் கொண்டான்
வரமான மங்களமும் வாரியருள் சொரிவான்

# 16

## திருவருளை இறைஞ்சும் துதிக்கையன்

ராகம் : கல்யாணவசந்தம் தாளம் : ஆதி

பல்லவி

சொரிவான் அருள் மழை
பரராஜ சேகரன்
அரிஅயன் போற்றிடும்
ஆனைமுகத்தவன்

அநு பல்லவி

விரிவான ஓங்காரன்
வேழமுகத்தவன்
புரியான இணுவையின்
புண்ணியன் பூரணன்

சரணம்

திருவருளை இறைஞ்சும்
துதிக்கையன் மாதங்கன்
ஒருவருமில்லை என்றால்
ஓடிவந்தே காப்பவன்
பெருவயிற்றின் அழகன்
பெருச்சாளி வாஹனன்
குருவடிவானவன்
குஞ்சரன் பக்தருக்கு.

17

## அத்துவிதங்கடந்த ஆனைமுகன்

ராகம் : கல்யாணி　　　　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

பக்தருக் கிரங்கிடும் பரராஜக் கணபதி
நித்தம் எமைக் காத்து
நீழல் தருபவன்

அநு பல்லவி

அத்துவிதங்கடந்த
ஆனைமுகத்தவன்
இத்தரணியில் இணுவை
இருந்தருள் புரிபவன்

சரணம்

கதி எவரும் இல்லைக்
கணபதி துணை என்றால்
அதி விரைவாக வந்தே
அருள் தருவான் ஐயன்
மதி முடி தரித்தவன்
மாதங்கக் கணபதி
நதி சூடும் அரன் மைந்தன்
நாயகன் ஏரம்பன்.

18

## பாரதம் எழுதிய வாரணன்

ராகம் : தேஷ் தாளம் : ஆதி

பல்லவி

ஏரம்பனைப் பணிமனமே – ஆத்தி
ஆரம் சூடும் ஐயன்
ஆனைமுகன் கஜானனன்

அநுபல்லவி

கோரக்கஜ சூரனைக்
கொன்ற வீர கணபதி
பாதம் எழுதிய
வாரணன் பூரணன்

சரணம்

கோல இணுவைப் பதி
கோயில்கொண்ட ஐங்கரன்
சீலப் பரராஜ
சேகரப் பிள்ளையார்
வேலவன் சோதரன்
வேண்டும் வரந்தருவான்
காலைப் பிடித்தவர்க்குக்
கதியென அருளுவான்.

19

## ஆதாரம் நீதானையா ஆனைமுகத்தவனே !

ராகம் : ப்ருந்தாவனஸாரங்கா தாளம் : ஆதி

பல்லவி

அருள்நிறைகஜமுகனே – ஆதரி
பொருள்புரிந்துன்னருளைப்
போற்றித் தமிழிற் பாட

அநு பல்லவி

இருள்வினை அகற்றிடும்
ஏரம்பனே பரனே
ஒருவரும் இல்லை ஐயா
உன் பதமே கதி

சரணம்

பாதாரம் நிதம் பணிந்து
பனிமலர்ப் பூச்சூட்டி
நீதான் கதியெனவே
நித்தமும் தொழுது நின்றேன்
ஆதாரம் நீதானையா
ஆனைமுகா இணுவை
வேதாகமம் போற்றும்
பரராஜசேகரனே.

20

## பரமக்ருபாநிதி பரராஜசேகரன்

ராகம் : காம்போதி | தாளம் : ஆதி

### பல்லவி

பரராஜசேகர விநாயகனே – அபயம்
புரமான இணுவையில்
வரமீய்ந்தருள் தரும்

### அநு பல்லவி

கரமானதும்பிக்கை
காட்டிடும் நம்பிக்கை
அரனாரும் அரிஅயனும்
ஆனந்தமாகப் போற்றும்

### சரணம்

சரணமலர்களையே
தஞ்சமென்றே அடைந்தோம்
சிரமிசைக் கைகூப்பிச்
சேவித்தோம் ஐங்கரனே
தரணியில் நீ கதியே !
தந்திமுகத்தவனே
பரமக்ருபாநிதியே
பரராஜசேகரனே.

21

## மங்களம்

ராகம் : சுருட்டி

தாளம் : ஆதி

பல்லவி

பரராஜசேகரக் கணபதிக்கு மங்களம்
புரமான இணுவைக்கும்
அடியார்க்கும் மங்களம்

அநு பல்லவி

நடராஜன் சிவகாமிக்கும்
நாரணன் மகாலக்ஷ்மிக்கும்
வடிவேலன் கந்தனுக்கும்
வள்ளிகுஞ்சரியருக்கும்

சரணம்

பஞ்சமுக விநாயகர்க்கும்
பைரவப் பெருமானுக்கும்
கஞ்சமஹாலக்ஷ்மிக்கும்
காளிங்க நர்த்தனர்க்கும்
அஞ்சலருள் லிங்கேஸ்வரர்
அருள்தக்ஷணாமூர்த்திக்கும்
மிஞ்சுநவக்ரஹம் நால்வர்
மிளிர் சண்டேஸ்வரருக்கும்

முற்றும்


பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர்
அவர்கள் இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப்
பிள்ளையார் மீது பாடிய
**திருஅந்தாதிக் கீர்த்தனைகளை**
கும்பாபிஷேக மலராக
வெளியிட்டிருக்கிறோம்.

இருபத்தொரு கீர்த்தனைகளும்
அந்தாதி வடிவத்தில் பிள்ளைகளைப்
பெற்றெடுப்பதைப் போல அவர்
ஈன்றெடுத்திருக்கிறார். விநாயகரைப்
போற்றி மனமுருகப் பாடியவைகள்
அவை; அன்போடு உருவானவை.
அற்புதமானவை. ஐயர் அவர்களின்
திறமையை விளக்கும்
இருபத்தொரு சான்றுகள் அவை.

படியுங்கள், மனமுருகப் பாடுங்கள்
பயன் கிடைக்கும்.

வெளியீடு:
அம்மா விளம்பர சேவை
கொழும்பு 06.

திருமதி. சு. வீரமணி ஐயர்



## பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்

சங்கீதம், நாட்டியம், நாடகம், சிற்பம், ஓவியம் ஆகிய நுண்கலைகளின் இருப்பிடமாக விளங்குவது 'இணுவையம்பதி' என்று சிறப்பித்துச் சொல்லப்படும் இணுவில் என்னும் கிராமமாகும். காலத்துக்குக் காலம் கல்விமான்களும் கலைஞர்களும் தோன்றி, இயல், இசை நாடகம் என்னும் முத்தமிழையும் வளர்த்து வந்திருக்கிறார்கள். அக்காலத்தில் வயலின் வித்துவானாக பிரபல்யம் பெற்று விளங்கியவர் இணுவில் பிரம்ம ஸ்ரீ நடராஜ ஐயர் ஆவார். இந்த இசைக் கலைஞரது கனிஷ்ட புத்திரன் தான் 'இயலிசை வாரிதி' பிரம்ம ஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள்.

இளமைப் பிராயத்திலேயே சங்கீத ஞானம் கைவரப்பெற்றுக் கவிபாடும் ஆற்றலில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் திகழ்ந்தார் 'கவி மாமணி' ந.வீரமணி ஐயர் அவர்கள். இவரது கற்பனை வளத்தில் உருவான பாடல்கள் பல, தமிழகத்தில் பிரபல்யம் பெற்ற பாடகர்களான டி.எம்.சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன் ஆகியோரால் பாடப்பெற்று இசைத்தட்டில் வெளிவந்துள்ளன. தமிழ் கூறும் நல்லுலகில் எல்லாம் இவரது புகழ் பரவத் தொடங்கவே 'இயலிசை வாரிதி', 'கவிமாமணி', 'அருட்கலை வாரிதி', 'ஸாஹித்ய சிரோன்மணி' ஆகிய பட்டங்களும் இவரைத் தேடி வந்தன. பலாலி, கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் நடன விரிவுரையாளராகக் கடமையாற்றி பல நாட்டிய மேதைகளை உருவாக்கினார். இவரது நாட்டிய நாடகங்கள் ஈழத்தின் பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்டு மக்களின் அமோக வரவேற்பைப் பெற்றன.

யாழ்ப்பாணத்தில், வரலாற்றுப் பெருமையுடன் சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் 'இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார்' கோயிலில் அண்மையில் நடைபெற்ற மஹா கும்பாபிஷேகத்தின் போது வீரமணிஐயர் தமது குலதெய்வமான ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் மீது "திருவந்தாதிக் கீர்த்தனைகள்" பாடியுள்ளார். அவைகளைத் தொகுத்து நூல் வடிவில் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா நடைபெறும் இந்தப் புண்ணிய தினத்தில் வெளியிடப்பட விருக்கிறது.

இசை வானில் வீரமணி ஐயர் என்றும் ஒளிவிடும் தாரகையாகப் பிரகாசிக்க வேண்டும் என்று பரராஜ சேகரப் பிள்ளையாரது பாதார விந்தங்களை பணிந்து வேண்டுகின்றோம்.